# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு - 2013/2014 (August 2020)

## EDS 4153 கல்விச் சமூகவியல்
## (Sociology of Education)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று (03) வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. “கல்விப் பணிபுரிவோர் சமூக நோக்குடன் பணியாற்றும் போதே அச்சமூகம் முழுமை எய்தும்” இதனை அடிப்படையாகக் கொண்டு,

   அ) கல்விச் சமூகவியல் என்ற எண்ணக்கருவை வரையறை செய்க. (02 புள்ளிகள்)

   ஆ கல்விச் சமூகவியலின் தோற்றம் வளர்ச்சியினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

   இ)ஆசிரியர்கள் தாம் கற்பித்தல் பணியை மேற்கொள்ளும் போது கற்பிக்கும் மாணவர்கள் வாழும் சமூகச் சூழல் பற்றிய தெளிவான புரிதல் அவசியமாகும். இந்த வகையில் கல்விச் சமூகவியலை அறிய வேண்டியதன் முக்கியத்துவங்கள் ஆறினைக் (04) குறிப்பிட்டு பொருத்தமான உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

2) அ. சமூக நகர்வு( Social Movement) என்ற எண்ணக்கருவைச் சுருக்கமான வரையறை செய்க. (02 புள்ளிகள்)

   ஆ சமூகப் பெயர்ச்சி தொடர்பில் இனங்காணப்பட்டுள்ள அதன் வகைகளைப் பொருத்தமான உதாரணங்கள் காட்டி விளக்குக. (04 புள்ளிகள்)

   இ. சமூகப்பெயர்ச்சியை தூண்டுவதில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. இத்தகைய காரணிகளின் தாக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். இவை தாக்கம் செலுத்துவதன் மூலம் சமூகப் பெயர்ச்சி நிகழ்கின்றது. அத்தகைய காரணிகளைக் குறிப்பிட்டு அதில் கல்வி மூலமான செயற்பாடுகள் மூலம் ஏற்படும் சமூகப் பெயர்ச்சியை உதாரணங்கள் காட்டி விபரிக்குக. (08 புள்ளிகள்)

3) அ. பண்பாடு என்ற எண்ணக்கருவை வரையறை செய்க (02 புள்ளிகள்)

   ஆ. ஓர் ஆசிரியர் என்ற வகையில் பண்பாட்டை வளர்ப்பதில் கல்வியின் பங்களிப்பினை பொருத்தமான நான்கு(04) உதாரணங்கள் மூலம் விபரிக்குக. (04 புள்ளிகளா)

   இ. பண்பாட்டுப் பின்னடைவு சமூகத்தின் வளர்ச்சியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை நான்கு(04) பொருத்தமான நடைமுறை ஆதாரங்களைக் கொண்டு விமர்சிக்குக. (08 புள்ளிகளா)

## பகுதி II

4) அ. பாடசாலையும் சமூகமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய இரு கருவிகளாகும். இவற்றுக்கிடையே உறவு ஏன் இருக்க வேண்டும் என்பதற்கான அடிப்படைகளைக் குறிப்படுக. (04 புள்ளிகள்)

ஆ. பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் முக்கியமான அம்சங்கள் நான்கினை (04) உதாரணங் காட்டி விளக்குக. (08 புள்ளிகள்)

இ. பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையேயான உறவு மிக மேம்பட்ட வகையில் அமையுமிடத்து அச்சமூகத்தில் உன்னத விளைவுக்ளைக் இனங்காண முடியும். அவ்வகையில் அவற்றுக்கிடையே உறவைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள் ஆறினை(06) குறிப்பிட்டு அவற்றினைப் பொருத்தமான உதாரணங்கள் மூலம் விபரிக்குக. (12 புள்ளிகள்)

5) அ. அபிவிருத்தி அடைந்து வருகின்ற சமூகத்தில் பாடசாலைகள் ஆற்ற வேண்டிய பணிகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

ஆ. அபிவிருத்தி அடைந்து வருகின்ற பாடசாலை ஒன்றினை வளர்ப்பதில் சமூகம் ஆற்ற வேண்டிய பங்களிப்புக்கள் நான்கினைச் நடைமுறை உதாரணங்களைக் கொண்டு தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

இ. இலங்கையில் பாடசாலைகளை அபிவிருத்தி அடையச் செய்வதில் சமூகத்தின் பங்களிப்பு போதுமானதல்ல. இது தொடர்பில் நடைமுறையில் உள்ள காரணிகளை சுட்டிக்காட்டி உமது மதிப்பீட்டை முன்வைக்குக. (12 புள்ளிகள்)

6) அ. சமூக மாற்றம் என்ற அம்சத்தைப் பொருத்தமான ஆதாரங்களைக் காட்டி வரையறை செய்க. (04 புள்ளிகள்)

ஆ. சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் கல்வியின் பங்களிப்பின்னைப் பொருத்தமான நான்கு(04) அம்சங்களை உதாரணங்கள் காட்டி விளக்குக. (08 புள்ளிகள்)

இ. சமூகத்தில் பின்தங்கிய குழுக்கள் கல்வியில் முன்னேற்றமடைவதற்கு உம்மால் முன்வைக்கக் கூடிய ஆலோசனைகள் ஆறினை (6) முன்வைத்து விபரிக்குக. (12 புள்ளிகள்)

7) அ. சமூக வாழ்வியலில் தன்னைப் பற்றியும் தம் சூழலைப் பற்றிய தெளிவான விளக்கத்தையும் பெற சமூகமயமாக்கல் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகும். சமூகமயமாக்கல் என்பதைப் பொருத்தமான நடைமுறை உதாரணங்களைக் காட்டி வரையறை செய்க. (04 புள்ளிகள்)

ஆ சமூகமயமாக்கலில் காணப்படும் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றைப் பொருத்தமான உதாரணங்கள் காட்டி சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

இ. "பிள்ளைகளிடத்தே சமூகமயமாக்கலைச் செய்வதில் குடும்பம், பாடசாலை, ஒப்பார் குழு ஆகியவற்றின் செல்வாக்கினைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, இன்று வெகுஜன ஊடகங்கள் சமூகமயமாக்கல் செயற்பாட்டில் முக்கிய இடத்தினை வகிக்கின்றது". என்னும் கூற்றைத் தர்க்க ரீதியாக ஆராய்க.

(12 புள்ளிகள்)